**வரையறுக்கப்பட்ட லிற்றோ காஸ் லங்கா கம்பனி – 2017**

---

வரையறுக்கப்பட்ட லிற்றோ காஸ் லங்கா (கம்பனி) கம்பனி மற்றும் அதனுடைய முதலீட்டாளர் (கம்பனி மற்றும் முதலீட்டாளர்) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாபநட்ட கூற்று மற்றும் ஏனைய விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் இந்த அறிக்கை வழங்கப்படுகின்றது.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான சபையின் பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை (''சபை'') பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. சபையினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் சபையினால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச்சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

வரையறுக்கப்பட்ட லிற்றோ காஸ் லங்கா கம்பனியின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.1.1 ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2007 ம் ஆண்டு 7 ம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 163 (2) ஆம் பிரிவின் மூலம் வேண்டப்பட்டவாறு, நான் பின்வருமாறு குறிப்பிடுகின்றேன்.

அ) அபிப்பிராயத்திற்கான அடிப்படையும் கணக்காய்வின் நோக்கெல்லையும் வரையறைகளும் மேற்குறிப்பிடப்பட்டவாறு இருக்கின்றன.

ஆ) எனது அபிப்பிராயத்தில்:

- கணக்காய்விற்கு அவசியமானதும், சகல தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என்பதுடன் இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுகின்றவாறு முறையான கணக்கீட்டுப் பதிவேடுகள் கம்பனியால் பேணப்படுகின்றன என்பதும், மற்றும்

- 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 151 ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுடன் கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் இணங்குகின்றன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களிற்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 2003 யூன் 02 இன் பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை- நல்லாளுகைக்கான வழிகாட்டல்கள் | |
| (i) 4.2.2 ஆம் வழிகாட்டல் | ஒவ்வொரு மாதாந்த சபைக் கூட்டத்திலும் மாதாந்ந நிதசார் மற்றும் பௌதீக செயல்திறன் கூற்று, செயற்பாட்டுக்கூற்று, காசுபாய்ச்சல் கூற்று, திரவத்தன்மை நிலைமை மற்றும் கடன் பெறுகைகள் மற்றும் பதவியிணர் நிலைமைகள், புதிய ஆட்ச்சேர்ப்பு உள்ளடங்களான மனிதவளக்கூற்று ஆகியவை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ii) | 4.3 ஆம் வழிகாட்டல் | சபைக்கூட்டம் முடிவடைந்து 10 நாட்க்களுக்குள் சபை கூட்டக் குறிப்பானது வரிசை அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | 5.1.1 ஆம் வழிகாட்டல் | கம்பனி 3 வருடத்திற்குரிய கூட்டிணைந்த திட்டம் (Corporate plan) தயாரிக்க வேண்டியதுடன் அத்திட்டமானது ஆண்டுதோறும் மேம்படுத்தப்பட வேண்டும். மேம்படுத்தப்பட்ட வருடாந்த பாதீட்டுடன் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டத்தின் பிரதி நிதியாண்டு ஆரம்பிப்பதற்கு 15 நாட்களுக்கு முன்பு வரிசை அமைச்சு, பொது முயற்சிகள் திணைக்களம், பொது திறைசேரி மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்புதல் வேண்டும். எவ்வாறாயினும் கம்பனி இத் தேவைப்பாட்டுடன் இணங்கயிருக்கவில்லை. |
| (iv) | 5.2.2 (a) ஆம் வழிகாட்டல் | மீளாய்வாண்டின் மூலதனப் பாதீட்டில் இணைக்கப்பட முன்னர் ரூபா 716 மில்லியன் மதிப்பீட்டுக் கிரயத்துடனான நிரப்பல் பொறியினை அம்பாந்தோட்டையில் நிர்மானிப்பதற்கான சாத்திய வள ஆய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (v) | 5.2.2 (b) ஆம் வழிகாட்டல் | 2017ம் ஆண்டில் ரூபா 24 மில்லியனுக்கு ஐந்து மோட்டார் வாகனங்கள் கொள்வனவிற்கான அமைச்சின் அங்கீகாரம் மற்றும் பொது முயற்சி திணைக்களத்தின் இணக்கப்பாடு பெறப்பட்டிருக்கவில்லை. |
| (vi) | 5.2.4 மற்றும் 5.2.5 ஆம் வழிகாட்டல் | நிதியாண்டு ஆரம்பிப்பதற்கு 3 மாதங்களிற்கு முன்னர் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டிருக்க வேண்டிய 2017 ஆம் ஆண்டுக்கான வரைபுப் பாதீடானது, திசெம்பர் 2016 இல் அங்கீகரிக்கப்பட்டிருந்தது.<br><br>மேலும், வழிகாட்டலில் குறித்துரைக்கப்பட்ட படி மீளாய்வாண்டிற்கான அங்கீகரிக்கப்பட்ட பாதீட்டின் பிரதிகள் வரிசை அமைச்சு, பொது முயற்சி திணைக்களம், பொதுத் திறைசேரி மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை. |
| (vii) | 8.3.1 ஆம் வழிகாட்டல் | 2017 ஆம் ஆண்டில் விளம்பரத்திற்காக ரூபா 15,453,607 தொகை செலவழிக்கப்பட்டிருந்தாலும், விளம்பர முகவர் கொள்ளல் நடைமுறைகள் ஊடாக தெரிவு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (viii) | 8.3.8 ஆம் வழிகாட்டல் | 2017 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சரின் அங்கீகாரமின்றி ரூபா. 5,272,730 தொகை வேறுபட்ட தரப்பினர்களுக்கு நன்கொடையளிக்கப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| (ix) | 8.7 ஆம் வழிகாட்டல் | 2016 இலிருந்து 2018 வரையான காலப்பகுதியில் 60 ஊழியர்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற தேசிய தொழிலாளர்கள் சங்கத்திற்கும் கம்பனிக்கும் இடையில் 20 ஏப்ரல் 2016 இல் ஏற்ப்படுத்திக்கொண்ட உடன்படிக்கையின்படி, உழைக்கும் போதான வரி முதலில் ஊழியர்களினால் செலுத்தப்படல் வேண்டும் மற்றும் ஒவ்வொரு ஊழியர்களாலும் செலுத்தப்பட்ட சராசரியான உழைக்கும் போதான வரி தொடர்சியாக கம்பனியினால் படியாக ஊழியர்களுக்கு மீள செலுத்தப்பட வேண்டும், எனினும் இது வழிகாட்டலில் உள்ள ஏற்பாடுகளுக்கு முரணாக காணப்படுகின்றது. |
| (x) | 9.2 ஆம் வழிகாட்டல் | பொது முயற்சி திணைக்களம், பொது திறைசேரியின் அங்கீகரிக்கப்பட்ட பதவிநிலையுடன் பதிவுசெய்யப்பட்ட அமைப்பு வரைபடத்தை கம்பனி கொண்டிருக்கவில்லை. புதிய பணிநிலையை உருவாக்குதல் அல்லது மேலதிக பணிநிலை நிகழ்வுகள் சம்பந்தமாக கம்பனியானது பொது முயற்சி திணைக்களத்துடன் ஆலோசனை பெறுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (xi) | 9.3 ஆம் வழிகாட்டல் | சபை மற்றும் அமைச்சு, பொது முயற்சி திணைக்களங்களினால் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டம் மற்றும் பதவியுயர்வு திட்டங்களை கம்பனி கொண்டிருக்கவில்லை. |
| (ஆ) | 01 செப்தெம்பர் 2011 திகதியிடப்பட்ட பொது முயற்சிகள் திணைக்கள சுற்றறிக்கை இலக்கம் பீஈடி 58(2) | நிறுவனங்களின் வகைப்படுத்தல்கள் சுற்றறிக்கைக்கு அமைவாக லிற்றோகாஸ் லங்கா லிமிடெட் “எப் (F)” வகையின் கீழ் காணப்படுகின்றது. இந்த உப பகுதியின் கீழ் அரச உடைமை நிறுவனங்களின் பிரதான நிறைவேற்று அதிகாரிகளினுடைய படிக் கொடுப்பனவுகள் மற்றும் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளானது ஒத்த நிறுவனங்களால் பிரயோகிக்கப்பட்ட போட்டிச்சந்தை வீதங்கள், கல்வி மற்றும் தனிநபரின் திறமை போன்றவற்றிற்கிணங்க மதிப்பிற்குரிய நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சரின் சம்மதத்துடன் உரிய பணிப்பாளர் சபையினால் தீர்மானிக்கப்படும். எவ்வாறாயினும் கம்பனியானது ஊழியர்களின் சம்பளத்தினை தீர்மானிக்கும்போது நிதி அமைச்சரின் இணக்கப்பாடு பெறப்பட்டதா என்பதனை கணக்காய்வினால் உறுதிப்படுத்த முடியாதிருந்தது. |
| (இ) | கொள்ளல் வழிகாட்டல்கள் - 2006 இன் 4.2.1 ஆம் வழிகாட்டல் | கம்பனியினால் ஆகக்குறைந்தது 3 வருடங்களிற்கான பிரதான கொள்ளல் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்திருக்கவில்லை. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவு

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், கம்பனி மற்றும் முதலீட்டாளரின் தொழிற்பாட்டினால் மீளாய்வாண்டில் ரூபா 419.85 மில்லியன் வரிக்கு முன்னரான தேறிய இலாபத்துடன் ஒப்பிடுகையில் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் ரூபா 4,895.08 மில்லியன் வரிக்கு முன்னரான தேறியலாபத்தை விளைவித்திருந்தமையினால் நிதிசார் விளைவுகளில் ரூபா 4,475.23 மில்லியன் பற்றாக்குறையொன்றை சுட்டிக்காட்டுகின்றது. வருமானம் ரூபா. 5,468.13 மில்லியனால் அல்லது 22 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டிருந்தபோதும், விற்பனைகிரயம் ரூபா. 9,605.68 மில்லியனால் அல்லது 49 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டிருந்தமையானது நிதிசார் விளைவுகளின் இந்தப் பற்றாக்குறைக்கான பிரதான காரணமாக காணப்பட்டிருந்தது.

### 3.2 பகுப்பாய்வுரீதியான நிதிசார் மீளாய்வு

#### 3.2.1 முக்கியமான கணக்கீட்டு விகிதங்கள்

சேகரிக்கப்பட்ட தகவலின் பிரகாரம், 2017 ம் ஆண்டிற்கான மற்றும் முன்னைய ஆண்டிற்கான கம்பனியின் சில முக்கியமான கணக்கீட்டு விகிதங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| **இலாபத்தன்மை விகிதங்கள் (சதவீதம்)** | **2017 (%)** | **2016 (%)** |
|---|---|---|
| மொத்த இலாபம் (ஜீபீ) | 4 | 21.5 |
| தேறிய இலாபம் (என்பீ) | 0.86 | 13.98 |
| சொத்துமீதான திரும்பல்(ஆர்ஓஏ) | 1.05 | 14.73 |
| ஈடுபடுத்தியமுதல் மீதான வருவாய் (ஆர்ஓசிஇ) | 1.24 | 18.75 |
| | | |
| **திரவத்தன்மைவிகிதங்கள்**<br>(தடவைகளின் எண்ணிக்கை) | | |
| நடைமுறைச்சொத்து விகிதம் | 3.07:1 | 3.48:1 |
| விரைவுச்சொத்து விகிதம் | 2.67:1 | 3.15:1 |

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மொத்த இலாப எல்லை மற்றும் தேறிய இலாப எல்லை முறையே 17.5 சதவீதம் மற்றும் 13.12 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்து காணப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் திரவத்தன்மை விகிதங்கள் குறைவடைந்திருந்தது. மேலும், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் சொத்து மீதான திரும்பல் மற்றும் ஈடுபடுத்திய முலதனம் மீதான திரும்பல் முறையே 13.68 சதவீதத்தால் மற்றும் 17.51 சதவீதத்தால் குறைவடைந்து காணப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில், மீளாய்வாண்டில் கம்பனியினுடைய இலாபத்தன்மை மற்றும் திரவத்தன்மை வீழ்ச்சியடைந்து காணப்பட்டிருந்நது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 முகாமைத்துவ செயற்பாடுகள்

(அ) 2013 யூன் மாதம் எல்பிஜீ காஸ் இறக்குமதிக்காக துறைமுகம் மற்றும் விமான நிலையம் அபிவிருத்தி தீர்வை (பிஏஎல்) ரூபா 15.5 மில்லியன் தொகையை கம்பனி செலுத்தியது மற்றும் நகர்வு இரத்துச் செய்யப்பட்டு அதன் பிறகு இத்தொகை வருமதியாக இனங்காணப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மீளாய்வாண்டின் இறுதியில் கூட கம்பனியானது அந்தத்தொகையை அறவிடுவதற்கு சாதகமான நடவடிக்கை எடுத்திருக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 31 திசெம்பர் 2017 திகதியிலுள்ளவாறு, மொத்த கொள்கலன் வைப்பு வருமதிகளில் ரூபா 4.9 மில்லியன் தொகையானதுடன் அதில் ரூபா 4.55 மில்லியன் 2006 தொடக்கம் 2014 காலப்பகுதியுடன் தொடர்புடையது. எவ்வாறாயினும், கம்பனியானது நீண்டகாலமாக அந்தத் தொகையை அறவிடுவதற்கு சாதகமான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 4.2 விளைவற்ற சொத்துக்கள்

உருகொடவத்த என அழைக்கப்பட்ட நிலத்தின் உறுதி கம்பனியின் பெயரில் பெறப்பட்டிருக்கவில்லை மற்றும் கொழும்பு காஸ் கம்பனியின் முன்னால் நிர்வாக நிறுவுனரினால் 1986 ம் ஆண்டில் ரூபா. 13 மில்லியன் பெறுமதியில் அந்த நிலம் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், கம்பனியினால் கொள்வனவு செய்யயப்பட்ட காலப்பகுதியிலிருந்து இது உபயோகப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 4.3 சர்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல்வாங்கல்கள்

புதிய கருத்திட்டங்கள் மற்றும் திட்டங்கள் விரிவாக்கலின் பிரகாரம் கம்பனி மற்றும் அமைச்சிற்கு இடையே தொடர்பை ஏற்படுத்துவதற்கு தொழில்முயற்சி அமைச்சினால் பரிந்துரைக்கப்பட்ட 4 அமைச்சு ஒருங்கிணைப்பாளர்கள் 4 வாகனங்களுடன் நியமிக்கப்படுவதற்கு கம்பனியின் சபையினால் 30 ஒக்டோபர் 2016 இல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது. கம்பனியினால் அந்த ஒருங்கிணைப்பாளர்களுக்காக செலுத்தப்படடிருந்த ஒன்றிணைக்கப்பட்ட தொகையான ஊதியம் ரூபா.3,600,000 மற்றும் ரூபா.1,041,197 தொகையான எரிபொருள் மற்றும் பராமரிப்பு செலவுகளுக்குள் உள்ளடக்கப்பட்டிருந்தபொழுதிலும், அத்தகைய திட்டங்களின் விபரம் மற்றும் திட்டங்கள் விரிவாக்கல் ஒருங்கிணைத்தல் நடவடிக்கைகளை உறுதிப்படுத்தல்கள் கணக்காய்விற்கு பெறப்படவில்லை.

### 4.4 மோட்டார் வாகனங்களின் பயன்பாடு

இரண்டு மோட்டார் வாகனங்கள் பகுதி நேர அடிப்படையில் கம்பனிக்கு சேவை செய்யும் தலைவருக்கு ஒதுக்கப்பட்டிருந்தது.

## 4.5 சந்தைப் பங்கு

கம்பனி குறிப்பிட்டதன்படி, எல்பீ காஸ் துறையானது தொடர்ச்சியாக வளர்ச்சியடைகின்றதுடன் வரையறுக்கப்பட்ட லிற்றோ காஸ் லங்கா கம்பனி சந்தை முன்னோடியாக இருக்கின்றது, 2017 ம் ஆண்டுக்காலப்பகுதியில் கம்பனியானது உள்ளூர் சந்தையின் எல்பீஜீ தேவைப்பாட்டின் 72 சதவீதத்தினை வழங்கியிருந்தது. மீளாய்வாண்டு காலப்பகுதியின்போது மற்றும் கடந்த மூன்று வருடங்களிலும் கம்பனியின் விற்பனை அலகுகள் படிப்படியாக அதிகரிக்கப்பட்டிருந்தது.

## 5. நிலைபேறான அபிவிருத்தி

### 5.1 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளினை அடைந்துகொள்ளல்

ஐக்கிய நாடுகள் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சத்திட்ட நிகழ்ச்சிநிரல் 2030 இன் இணக்கப்பாட்டின் பிரகாரம் ஓவ்வொரு பொதுநிறுவகங்களும் செயற்ப்படல் வேண்டும். மீளாய்வாண்டு தொடர்பில் வரையறுக்கப்பட்ட லிற்றோ காஸ் லங்கா நிறுவனமானது, அதன் நோக்கெல்லை வரம்பின் கீழுள்ள செயற்பாடுகள் தொடர்பில் எவ்வாறு அளவிடைகளினை மேற்க்கொள்வது என்பதனை அறிந்திருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானங்கள் மேற்க்கொள்ளப்பட்டன.

(அ) மலிவான மற்றும் சுத்தமான சக்தி, வறுமையின்மை, நல்ல உடல்நலம் மற்றும் நல்வாழ்வு மற்றும் நிலையான வாழ்கை போன்ற நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளினை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் அடையாளம் காணப்பட்டபோதிலும், அந்த இலக்குகளினை அடைந்து கொள்வது தொடர்பில் படிக்கற்கள் மற்றும் அவ்வாறான இலக்குகளின் தெளிவான அடைவுகளினை மதிப்பீடு செய்வதற்கான குறிகாட்டிகளுடன் தொடர்பான இலக்குகளை கம்பனி அடையாளம் காணவில்லை.

(ஆ) கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களம் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளினை அடைவதற்கு கம்பனியின் செயற்ப்பாடுகளில் ஆர்வமாக இருப்பதனை இனங்கான முடிந்தது. இருப்பினும், அவற்றை அடையாளம் காண்பதில் நிறுவனம் தோல்வியடைந்ததால், நிறுவனத்திற்கு இலக்குகளை நிர்ணயிப்பதில் அவர்கள் பங்கெடுப்பு நடைபெறவில்லை என்பது மேலும் அவதானிக்கப்பட்டது.

(இ) இருக்கின்ற துல்லியமான புள்ளிவிபரத்தரவு ஒரு குறிப்பிட்ட நடவடிக்கையின் செயல்திறனை மதிப்பிடுவதற்கு கட்டாயமாக இருந்தபோதிலும், மேலே கூறப்பட்ட இலக்கினை மதிப்பீடு செய்வதற்கு ஒரு தரவுத் தளத்தை அமைப்பதற்கான ஒரு முறைமை கம்பனியிடம் இருக்கவில்லை.

(ஈ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கு தேவையான நிதி ஏற்பாடு ஆண்டுக்கான பாதீட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கான செயற்பாடுகளில் ஏனைய நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்பு இல்லாததால், இலக்குகளை அடைவதற்கான திட்டங்களை தயாரிப்பது மற்றும் தயாரித்தல் செயன்முறை வீழ்ச்சியடைந்து மற்றும் பலவீனமாக இருந்தது அவதானிக்கப்பட்டது.

## 6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

-----------------------------------------------------------------

### 6.1 உள்ளக்க கணக்காய்வு

----------------------------------------

உள்ளகக் கணக்காய்வு ஏதேனும் நிறுவனத்தின் முகாமைத்துவத்திற்கு பாரியதொரு எண்ணிக்கையான முக்கிய சேவைகளினை வழங்குகின்றது. இது மோசடியினை கண்டுபிடித்தல், மற்றும் தடுத்தல், உள்ளகக் கட்டுப்பாடுகளினை பரீட்சித்தல் மற்றும் அமைப்புக் கொள்கைகள் மற்றும் அரச பிரமாணங்களுடன் இணங்குவதனை மேற்பார்வை செய்தல் என்பவற்றினை உள்ளடக்கியுள்ளது. ஆகையினால், உள்ளகக் கணக்காய்வு செயற்பாடுகள் அமைப்பின் அபிவிருத்தியில் முக்கியமானதொரு பங்கினை வகிக்கின்றது. கம்பனியின் உள்ளகக் கணன்னாய்வு தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கணக்காய்விற்கு கிடைக்ககூடியதாக காணப்பட்ட அமைப்பு வரைபடத்தின் பிரகாரம், உள்ளக்க கணக்காய்வாளர் கம்பனியின் சபைக்கு நேரடியாகப் பொறுப்பானவராகக் காணப்படுகின்ற போதிலும், உள்ளக்க கணக்காய்வாளர் கம்பனியின் முகாமைத்துவப் பணிப்பாளருக்கு நேரடியாக பொறுப்புடையவராகக் காணப்படுகின்றார்.

(ஆ) கம்பனியினால் உள்ளகக்கணக்காய்வு நடைமுறை அல்லது கைநூால் அறிமுகஞ்செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) 2017 ஆம் ஆண்டுக்கான உள்ளகக்கணக்காய்வுத்திட்டத்திற்கு சபையின் அங்கீகாரம் பெறப்பட்டிருப்பாததுடன், உள்ளகக்கணக்காய்வு பகுதியினால் அனைத்து இடர் பகுதிகளையும் மேவுகை செய்யக்கூடியதாக முறையான இடர் மதிப்பீடு உருவாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) கம்பனியின் பணிப்பாளர் சபைக்கு உள்ளகக்கணக்காய்வின் அவதானிப்புக்கள் மற்றும் பரிந்துரைகள் ஒழுங்கான முறையில்மதிப்பிடப்பட்டு மற்றும் அறிக்கையிப்பட்டிருக்கவில்லை.

(உ) கணக்காய்விற்கு கிடைக்கக்கூடியதாகவிருந்த தகவல்களின் படி, பதவியிணர் சம்பளம் உள்ளகக் கணக்காய்விற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

(ஊ) பிரதான கணக்காய்வு உத்தியோகத்தர் உட்பட 3 அதிகாரிகள் மட்டுமே உள்ளகக்கணக்காய்வுப் பகுதிக்கு ஒதுக்கப்பட்டிருந்தனர்

### 6.2 கணக்காய்வுக் குழு

------------------------------

2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க மற்றும் 2010 திசெம்பர் 14 ஆந் திகதிய பீஈடீ/55 ஆம் இலக்க பொது முயற்சி சுற்றறிக்கைகளின் பிரகாரம், கம்பனியால் கணக்காய்வுக்குழு ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

### 6.3 பெறுகைகள் மற்றும் ஒப்பந்தச் செயற்பாடுகள்

--------------------------------------------------------------------------

எல்பீ காஸ் கொள்ளல் - 2017/2018 தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்க்கொள்ளப்பட்டன.

(அ) யூன் மாதம் 2017 இல் 2016/2017 ஆம் ஆண்டுக்கான கால ஒப்பந்தம் முடிவடைந்த போதிலும், 2017 யூலை வரை கம்பனி வழங்குனர் ஒருவரை தெரிவு செய்ய முடியாமலும், எல்பீ காஸ் கொள்ளல் உடன்படிக்கை ஒன்றுக்குள் உள்நுழைய முடியாமலும் இருந்தது மற்றும் தற்போதைய உடன்படிக்கை இன்னும் 3 மாதங்களுக்கு நீடிக்கப்பட்டிருந்தது. இதன் விளைவாக, கம்பனி 2017 ஒக்டோபரில் 2017/2018 ஆம் ஆண்டுக்கான கால ஒப்பந்தத்தின் இருப்பு மற்றும் காப்புறுதி விகிதத்துடன் ஒப்பிடும்போது, 2017

யூலை மற்றும் ஆகஸ்ட்டில் 46,674 மெட்ரிக் தொன் எல்பீ காஸிற்காக ரூபா. 67 மில்லியனுக்கு மேலாக இறக்குமதி செய்யப்பட்ட மேலதிக கிரயத்தினை உள்ளடக்கியிருந்தது.

(ஆ) கொள்ளல் வழிகாட்டல் 2006 ஆம் ஆண்டின் 6.3.6 ஆம் இலக்க கொள்ளல் வழிகாட்டலின் பிரகாரம், கேள்வி தொடக்கத்திற்கான பொருத்தமான பங்கேற்பு நிமிடங்கள் விதந்துரைக்கப்பட்ட வடிவமைப்பில் காணப்பட்டிருக்கவில்லை மற்றும் அத்தகைய நிமிடங்கள் ஒழுங்காக பராமரிக்கப்படவில்லை. பாதிக்கப்பட்ட கேள்விதாரர்களின் வெற்றிக் குறைவிற்கான காரணங்கள் கொள்ளல் வழிகாட்டல் 8.8 ஆம் இலக்கத்தின் படி சுருக்கமாக இருப்பினும், கம்பனி அதன்படி செயற்படவில்லை.

(இ) தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர்களின் பாதுகாப்பிற்காக குறிப்பிடப்பட்டிருக்கும் ஒப்பந்தம் மற்றும் நடுவர் சட்டத்தை நிர்வகிக்கும் சட்டம் கொள்ளல் வழிகாட்டல் - 2006 இன் 5.5.1 மற்றும் 5.4.14 (a) ஆம் இலக்கத்திற்கு முரணானது.

(ஈ) கேள்வி ஆவணங்களிள் குறிப்பிட்டுள்ளபடி, கேள்வி மதிப்பீட்டிற்கு வழங்கல் முன் அனுபவம் பிரதான மதிப்பீமு அடிப்படையில் ஒன்றாகும். எவ்வாறாயினும் 2010 ஆண்டிலிருந்து 2 வழங்குனர்கள் மட்டும் கம்பனிக்கு எல்பீ காஸ் வழங்குவதற்கான வழங்கல் முன் அனுபவத்தை கொண்டிருந்தனர். அதன் விளைவாக, எல்பீ காஸ் விநியோகத்திற்காக 2017/2018 ஆம் ஆண்டுக்கான கேள்வியில் 13 கேள்விதாரர்களில் 2 கேள்விதாரர்கள் மட்டுமே தகுதி பெற்றிருந்தனர். எனவே மதீப்பீட்டு அடிப்படையை உருவாக்கி இரண்டு கேள்விதாரர்களை மட்டும் தகுதி பெறுவது கணக்காய்விற்கு தெளிவாக தெரியவில்லை.

(உ) கணக்காய்விற்கு கிடைக்பெற்ற தகவலின் பிரகாரம், 2016 ஆம் ஆண்டில் கம்பனி பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் இரண்டு எல்பீ காஸ் வழங்குனர்கள் கறுப்புப்பட்டியலில் சேர்க்கப்பட்டிருந்தனர். இருப்பினும், கொள்ளல் வழிகாட்டல் - 2006 இன் 8.11.1 இலக்க வழிகாட்டல் தேவைப்பாட்டின் பிரகாரம் கம்பனி தவறு செய்த வழங்குனர்களின் பெயர்களை அரச நிதி திணைக்களத்தின் இணையதளத்தில் பிரசுரிக்க தோல்வியுற்றது. கறுப்புப் பட்டியலில்லிருந்து நீக்கப்பட்ட அந்த இரண்டு வழங்குனர்கள் மேலுள்ள கொள்ளலுக்காக விண்ணப்பித்ததை காட்டிலும் மேலும், அவற்றில் ஒன்று குறைந்த கேள்விக்குட்பட்டதாக இருந்தது. எவ்வாறாயினும், இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு கறுப்புப் பட்டியலில் காரணங்களின் அடிப்படையில் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவால் மிகக்குறைந்த அந்த கேள்விதாரர் நிராகரிக்கப்பட்டிருந்தார். கறுப்புப் பட்டியலில்லிருந்து நீக்கப்பட்ட பின்னரும் மிகக்குறைந்த கேள்விதாரரை நிராகரிப்பதற்கான தீர்மானம் வெளிப்படையானதல்ல.

மேற்படி அவதானிப்புக்கு பதிலிறுத்தபின், கம்பனியின் முகாமைத்துவ பணிப்பாளர் பின்வருமாறு கூறுகின்றார்

கொள்ளல் வழிகாட்டலின் பிரிவு 1.1 மற்றும் 1.2 இன் படி, இது முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஜிஓஎஸ்எல் (GOSL) இனால் நிதியுதவி பெறும் கொள்ளல் செயற்பாட்டுடன் தொடர்புபட்டது. இந்த கொள்ளல்களிற்கு எல்ஜிஎல்எல் (LGLL) இனால் நிதியளிக்கப்படுகின்றது இது திருத்தியமைக்கப்பட்ட இலங்கை கம்பனிச்சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டது. அரச நிதி திணைக்களத்தால் நியமிக்கப்பட்ட நிலையான அமைச்சரவை நியமன கொள்ளல்குழு (SCAP), தொழில்நுட்ப மதிப்பீட்டுக்குழுக்களின் பங்களிப்புடன் 2015 ம் ஆண்டிலிருந்து பணிப்பாளர் சபை ஓர் கொள்ளல் கொள்கையினை அநுசரித்தாலும், இது ஒரு

கடப்பாடாக இருக்கவில்லை. மேலும், 2017 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27 ஆம் திகதி கட்டளையிடப்பட்ட கோட்டை நீதவான் நீதிமன்றம் குறிப்பாக லிற்றோ காஸ் லங்கா லிமிடெட்டின் நிதி பொதுச்சொத்து என வகைப்படுத்த முடியாது என்பதனை வரையறுத்துள்ளது.

## 7. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின்போது முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் அவதானிக்கப்பட்ட பலவீனங்கள் காலத்திற்கு காலம் கம்பனித்தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

| | கட்டுப்பாட்டு விடயம் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | சொத்துக்கள் முகாமைத்துவம் | கம்பனியினுடைய சொத்துககள் உத்தம மட்டத்திற்கு உபயோகிக்கப்பட்டிருக்கவில்லை |
| (ஆ) | மனிதவள முகாமைத்துவம் | ஆட்ச்சேர்ப்புத் திட்டம் மற்றும் பதவியுயர்வு விருத்தி செய்யப்படவில்லை |
| (இ) | கொள்ளல் முகாமைத்துவம் | அரசாங்க கொள்ளல் வழியாட்டல் - 2006 உடன் இணங்கவில்லை |